# கிளிநொச்சி மாவட்டத்தினை ஆவணப்படுத்தல்
# ஆண்டறிக்கை 2021

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | கிளிநொச்சி பிராந்திய ஆவணப்ப்டுத்தல் |
| செயற்றிட்ட எண் | NF/GP/2020/0016 |
| செயற்றிட்ட இடம் | கிளிநொச்சி |
| செயற்றிட்டக் காலம் | ஜனவரி 2021 - செப்ரம்பர் 2021 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | கிளி மக்கள் ஒன்றியம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |
| செயற்றிட்டச் செலவுகள் | 2020 - LKR 160,917.75<br>2021 - LKR 669,746.34 |

இலங்கையின் வட மாகாணத்தில் இருக்கும் ஐந்து மாவட்டங்களில் ஒன்றாகக் கிளிநொச்சி அமைகின்றது. இது தமிழ் பேசும் மக்களினைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாவட்டம். இந்த மாவட்டத்திலே இலங்கைத் தமிழர்கள் மட்டுமல்லாது முஸ்லிம்களும், மலையகத் தமிழர்களும் வாழ்கிறார்கள். கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாறு, குறிப்பாக அங்கு இடம்பெற்ற காணி விநியோகத்தின் மூலமாக இடம்பெற்ற குடியேற்ற முயற்சிகள், கிராமங்களின் உருவாக்கம், அங்கு வாழும் மக்களின் பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்கள், கலை கலாசாரக் கூறுகள், சமூகக் கட்டமைப்புக்கள், விவசாயம் மற்றும் இதர வாழ்வாதார முறைகள், பன்மைத்துவம், சமூக நிறுவனங்கள், பாடசாலைகள், வழிபாட்டுத் தளங்கள், பெண்கள் அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள், அந்த மாவட்டத்திலே இடம்பெற்ற பொருளாதார மாற்றங்கள், அபிவிருத்தி முயற்சிகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு முறைகள் போன்றன பற்றியும், போர்க் காலத்தில் கிளிநொச்சி மாவட்டம் சந்தித்த பிரச்சினைகள், விடுதலைப் புலிகளின் ஆளுகையின் போது அந்த மாவட்டம் நிருவாக ரீதியாகப் பெற்றிருந்த முக்கியத்துவம் போன்ற விடயங்களையும், போருக்குப் பிந்தைய காலத்தில் இடம்பெறும் இராணுவமயமாக்கல், அபிவிருத்தி போன்றவற்றினை ஆவணப்படுத்தும் நோக்கிலே இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான எழுத்து மூலமாக மற்றும் அச்சு, பல்லூடக, இலத்திரனியல் சார்ந்ததாக காணப்படும் வளங்களைப் பாதுகாத்தல், ஆவணப்படுத்தல், அடிப்படையில் கிளிநொச்சி பிராந்தியத்தில் காணப்படுகின்ற அவர்களது சமூக, அரசியல், பொருளாதாரம் மற்றும் பண்பாடு சார்ந்த விடயங்களை ஆவணப்படுத்தலுக்கான ஓர் செயற்பாடாக கிளிநொச்சி மாவட்டத்தினை ஆவணப்படுத்தல் - கட்டம் 1 ஆரம்பமானது. அதற்கான செயற்பாடுகள் டிசம்பர் 2020 மூன்றாம் வாரத்தில் இல் ஆரம்பிக்கப்பட்டது. ஜனவரி 2021 முதல் செப்டம்பர் 2021 வரையான காலப்பகுதி வரை இடம்பெற்றது.
அடைவுகள்

| | பெறப்பட்ட ஆவணங்கள் | பக்கங்கள் | வாய்மொழி வரலாறுகள் | புகைப்ப டங்கள் | ஆளுமை | நிறுவன ங்கள் |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 90 | 9076 | - | 23 | 1 | - |
| பெப்ரவரி | 64 | 4936 | 4 | - | - | - |
| மார்ச் | 76 | 3688 | 2 | 120 | 6 | 1 |
| ஏப்ரல் | 40 | 3400 | 2 | 62 | 1 | 1 |
| மே | - | 340 | 1 | 55 | 14 | 0 |
| யூன் | 0 | 0 | 0 | 40 | 40 | 0 |
| யூலை | - | - | - | - | 31 | - |
| ஆகஸ்ட் | - | - | - | - | 19 | - |
| செப்டம்பர் | - | - | - | - | 31 | - |
| மொத்தம் | **270** | **21440** | **9** | **300** | **143** | **2** |

எதிர்கொண்ட சவால்கள்

- இவ்வாண்டில் கோவிட் 19 காரணமாக அதிகமாக அடைவுகள் சார்ந்த விடயங்களை எட்டுவது கடினமாக அமைந்தது. குறிப்பாக மூன்று மாதங்கள் முழுமையாக வேலைகளை தொடர முடியாத நிலைமை காணப்பட்டது.
- புதிய அலுவலக ஒழுங்குகள் பயிற்சிகள் ஓர் சவாலான காரணியாக அமைந்தது.
- மின்வருடுவதற்காக ஆவணங்கள் அதிகமாகவே கள ஆய்வாளரால் சேகரிக்கப்பட்டன. அவற்றை மின்வருடுவதற்கான கருவிப்ற்றாக்குறை ஓர் சவாலாக அமைந்தது ஏ4 மின்வருடி மாத்திரம் காணப்பட்டமை.
- வாய்மொழி வரலாற்றை தொடர்ச்சியாக பெறுவதால் Recorder ஒன்றினை பயன்படுத்துவதால் ஏற்பட்ட கால தாமதம். வாய்மொழி வரலாற்று பயிற்சிகள் அறிமுகம் செய்யப்பட்டு கோவிட் காரணமாக பெறப்படாமை.
- மீதரவு இற்றைப்படுத்தல் சார்ந்த போதிய அறிவு இன்மை, அவற்றை கற்பதற்கான ஆர்வம் குறைவாக காணப்பட்டமை.
- அடைவுகளை சமர்ப்பிப்பதிலும் காப்புபடி தொடர்பான பின்னூட்டல்களை வழங்குவதிலும் ஏற்பட்ட தாமதம்.
- பிராந்திய காரியாலம் கிளிநொச்சியில் அமைந்திருந்தமையால் முழுமையான மேற்பார்வை செய்தலில் ஏற்பட்ட இடர்பாடுகள்.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- இவ்வாண்டில் கோவிட் 19 காரணமாக அதிகமாக அடைவுகள் சார்ந்த விடயங்களை எட்டுவது கடினமாக அமைந்தது. அதற்கான நிகழ்நிலை விடயங்களை அறிமுகம் செய்தல்.
- வாய்மொழி வரலாற்றை தொடர்ச்சியாக பெறுவதால் மேலதிக Recorder ஒன்றினை பரிந்துரை செய்தல்

- வாய்மொழி வரலாறு, மீதரவு இற்றைப்படுத்தல் சார்ந்த பயிற்சிகளை வழங்குவதுரன் அதற்கான அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான வழிகளை மேற்கொள்ளல்.
- அடைவுகளை சமர்ப்பிப்பதிலும் காப்புபடி தொடர்பான பின்னூட்டல்களை வழங்குவதை விடைவுபடுத்தல்.
- பிராந்திய காரியாலம் கிளிநொச்சியில் அமைந்திருந்தமையால் முழுமையான மேற்பார்வை செய்தலில் ஏற்பட்ட இடர்பாடுகள் தீர்ப்பதற்கு மாதாந்தம் ஒருமுறையாவது அலுவலகம் சென்று கண்காணித்தல்.
- இத்திட்டத்திற்கான எண்ணிமப்படுத்துவதற்கான ஊழியர் நியமிக்கப்படலாம்
- மேலதிக பதிவுக்கருவி, வேறு மாவட்டங்களுக்கு செல்வதற்கான பயண செலவீனங்களை நிதிப்பங்காளர்களிடம் பரிந்துரை செய்தல் அவசியம்
- ஊழியர்களுக்கு வாய்ழொழி வரலாறு, ஆய்வு சார்ந்த பின்புலங்களை உருவாக்குதல் புதிய ஆய்வுகளை இனங்காணுவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.
- வாய்மொழி வரலாற்றுக்கான நிறுவனத்திற்கான கையேடு ஒன்றினை விரைவாக உருவாக்குதல்

பின்னிணைப்புக்கள்
கிளிநொச்சி ஆவணகம்